# பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள்,2025-2026

## X-STD SAMPLE QUESTION PAPER, 2025-2026

## தமிழ் (TAMIL 006)

கால அளவு: 3 மணி | Time allowed : 3 Hrs

மொத்த மதிப்பெண்கள்: 80 | Maximum Marks : 80

### பகுதி - அ (படித்தல் திறன்)

### Unseen Passage-10 Marks

1. **அ .பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக..** (5x1=5)

திருவள்ளுவர் போற்றிய விருந்தோம்பல் புதியவர்களுக்கானது. இன்று அது மறைந்துபோன ஒன்று எனக் கூறல் வேண்டும்; அதற்கு மாறான புதிய விருந்தோம்பல் முறை ஒன்று இன்று சமூகத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளது. நன்கு அறிமுகமானவர்க்கும் பசி அறியாதவர்க்கும் ஆடம்பரமான வகையில் பேருணவு படைக்கும் வழக்கம் இப்போது விருந்து என்று பெயர் பெறுகின்றது.. இது, தன்னலமின்றி நிகழ்ந்துவந்த பழைய விருந்தோம்பலுக்கு மாறானது. இந்தப் புதிய முறைக்குத் தன்னலமே அடிப்படை. ஒருவர் செய்த உதவியைப் பாராட்டியோ, செய்யக்கூடிய உதவியை எதிர்பார்த்தோ, அல்லது அவரால் கிடைக்கும் பெயர் புகழ் கருதியோ அவர்க்கு விருந்து வைப்பது இன்றைய வழக்கம். எளிய மக்களுக்கு - செல்வமும் செல்வாக்கும் இல்லாதவர்க்கு - இத்தகைய விருந்தில் இடம் இல்லை என்பதாலேயே இதன் உண்மை வடிவம் விளங்குகிறது அன்றோ? ஒருகால் ஏழை எளியவர்க்கு இந்த விருந்தில் எவ்வாறோ கண் மறைவாகத் தப்பித் தவறி இடம் கிடைப்பினும், அவர் விருந்து அளிப்பவரிடமிருந்து இன்சொல் பெறமுடியாது. விழாக்களை முன்னிட்டு நடைபெறும் விருந்துகளும் குறித்த ஒரு நாள் அல்லது சிலநாள் மட்டுமே நிகழும். திருவள்ளுவர் கூறுவதுபோல், விருந்தினரை நாள்தோறும் ஓம்புதல் இன்று இல்லை. விருந்து என்று குறித்த நாள் கழிந்த மறுநாள் அங்குக் காக்கையும் நாடாது; எளிய கஞ்சியும் அங்கு மறுநாள் பெறுதல் அரிது. ஆதலின் பரந்த உணர்வு பெறவேண்டும். . பண்டைக்காலத்தில் இல்வாழ்வாரிடம் அமைந்திருந்த விருந்தோம்புதல் இன்று இல்லை

**வினாக்கள்**

I. இக்காலத்தில் விருந்து யாருக்குத் தரப்படுகிறது ?.

A( புதியவர்க்கு B (அறிமுகமானவர்க்கு C (பசி அறியாதவர்க்கு

D) அறிமுகமானவர்க்கும் பசி அறியாதவர்க்கும்

II. இன்றுள்ள புதிய விருந்து முறைக்கு எது அடிப்படையாக உள்ளது?

A( புகழை எதிர்பார்த்தல் B (தன்னல அடிப்படை

C (பாராட்டை எதிர்பார்த்தல் D) பெயரை எதிர்பார்த்தல்

III. இத்தகைய விருந்தில் யாருக்கு இடம் இல்லை?

A( செல்வம் இல்லாதவர்க்கு B (செல்வாக்கு இல்லாதவர்க்கு

C (செல்வமும் செல்வாக்கும் இல்லாதவர்க்கு D) செல்வந்தர்க்கு

IV. விருந்தோம்பலை எப்போது செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்?

A( நாள்தோறும் B (விழா நாள்களில் C (பண்டிகை நாள்களில்

D) பிறந்த நாளில்

V. திருவள்ளுவர் போற்றிய விருந்தோம்பல் யாருக்கானது?

A( உறவினர்களுக்கானது B (நண்பர்களுக்கானது

C (அண்டை வீட்டாருக்கானது D) புதியவர்களுக்கானது

2. **<u>பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக</u>.** **(5×1=5)**

வலுவான வரலாற்று ஆதாரங்களைக்கொண்டிருக்கும் சமூகத்தினர் நாம். சங்கஇலக்கியம் உரைத்த வரலாற்றுச் சான்றுகளைக் கீழடிச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முன்பே கீழை மற்றும் மேலைநாடுகளுடன் வாணிபத் தொடர்பைத் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர் என்று சிலப்பதிகாரம், பரிபாடல், மதுரைக்காஞ்சி போன்ற பண்டைய தமிழ்இலக்கியங்கள் பறைசாற்றிவந்தன. இந்த வரலாற்று உண்மையை அறிவியல் முறையில் உறுதிப்படுத்தும் விதத்தில்,தொல்லியல் அகழாய்வுகளில் கரிம மாதிரிகள் கிடைத்துள்ளன .அமெரிக்காவின் மியாமி நகரில்அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு.காலக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிச்சநல்லூரில் கிடைத்த முதுமக்கள் தாழி கி.மு.எட்டாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டது . கீழடியில் கிடைத்த எச்சங்கள் 2500ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததைக் கணிக்க உதவின. சிவகளை அகழாய்வில்கிடைக்கப்பெற்ற நெல்மணிகளைக் கரிமப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தியபோது அதன் வயது கி.மு. 1,155 என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொற்கை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற மேற்கத்திய நாட்டுப் பானை ஓடுகளும், வெள்ளிக் காசுகளும் பண்டைக்காலத்திலேயே பன்னாட்டு வணிகம் நடைபெற்றமைக்குச் சான்று

பகர்கின்றன.,.தொடரும் ஆய்வுகள் நம்முடைய தொன்மையை மட்டும் அல்லாது வரலாற்று மேன்மையையும் வெளிப்படுத்துகின்றன!

பண்டைய தமிழ் அரசுகள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே மாபெரும் கடல்வல்லரசுகளாகவும் இருந்துள்ளன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், சேரன் செங்குட்டுவனும் தம் கடற்படை மூலம் கடம்பக்கொள்ளையர்களை அழித்தனர் எனப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது

**வினாக்கள்**

I. மேலைநாடுகளுடன் தமிழர்கள் கொண்டிருந்த வாணிபத் தொடர்பைக் கூறும் இலக்கியங்கள் யாவை?
II. வரலாற்று உண்மையை அறிவியல் முறையில் உறுதிப்படுத்த ஆய்வாளர்கள் செய்வன யாவை?
III. பதிற்றுப்பத்து குறிப்பிடும் வரலாற்றுச் செய்தி யாது ?
IV. தமிழர்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன் எழுத்தறிவு பெற்றிருந்தனர்?
V. சிவகளை நெல்மணி கூறும் செய்தி யாது ?

## பகுதி - ஆ (இலக்கணப்பகுதி)

## Grammar-12 Marks

**3. சான்று தருக :(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** **(3x1=3)**

I. தொடர்மொழி

. A) படித்தான் B). அறம் வெல்க C) கை D) இசைத்தாய்

II. உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

A( வானவில் B (குறள் படி C (மாதவி மகள்

D).மலை ஏறினான்

III. மரபு வழாநிலை

A) தென்னஞ்செடி B) தென்னை இலை C) மாவிலை

D) கரும்பு ஓலை

IV. வினைமுற்றுத் தொடர்

A) சென்ற கோதை B) நல்ல மாணவன்

C) படித்தான் பாரி D) வாய்மையே வெல்லும்

V. செய்யுளிசை அளபெடை

A( உரனசைஇ B (கெடுப்பதூஉம் C (ஆஅளிய D) உடுப்பதும்

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக: (மூன்று மட்டும் )** **(3x1=3)**

I. பொருள்கோள் ________________ வகைப்படும்.

A) ஆறு B) ஏழு C) எட்டு D) ஒன்பது

II. ஐந்தொகைகளின் புறத்தே வேறு சில மறைந்துவரும் தொகை ____

A) வேற்றுமைத்தொகை B) உவமைத்தொகை

C) உம்மைத்தொகை D) அன்மொழித்தொகை

III. முதுவேனில் காலத்தைப் பொழுதாக உடைய திணைகள்

A) குறிஞ்சி,முல்லை,மருதம் B) முல்லை, மருதம்,நெய்தல்

இ) மருதம் ,நெய்தல்,குறிஞ்சி D) மருதம், நெய்தல் பாலை

IV. வெளிப்படை விடைகள் ........................ ஆகிய மூன்றும்ஆகும்.

A) சுட்டு ,ஏவல், மறை B) சுட்டு , மறை,நேர்

C) சுட்டு , மறை,இனமொழி D) சுட்டு , வினா ,நேர்

V. வினையைக் குறிக்காமல் வினை செய்தவனைக் குறிப்பது ________

A(. தொழிற்பெயர் B (பண்புப்பெயர்

C (வினையாலணையும் D).படர்க்கைப் பெயர்

**5. இலக்கணக் குறிப்பு எழுதுக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)**

**(3x1=3)**

I. யானோ அரசன்

A( .இடைச்சொல் தொடர் B(. வினைத் தொடர்

C (உரிச்சொல் தொடர் D) எழுவாய்த் தொடர்

II. நிலா நிலா ஓடிவா

A( மரபு வழு B (திணை வழு C (காலவழு

D) .மரபு வழுவமைதி

III. சாணம் மெழுகினாள்

A. இரண்டாம் வேற்றுமைத்தொகை

B. மூன்றாம் வேற்றுமைத்தொகாநிலை

C. இரண்டாம் வேற்றுமைத்தொகாநிலை

D. மூன்றாம் வேற்றுமைத்தொகை

IV. எங்கிறைவன்

A( மெய்யளபெடை B (ஒற்றளபெடை C (உயிரளபெடை

D) ஆய்தக்குறுக்கம்

V. புலி வில் கயல்

A) வேற்றுமைத்தொகை B) உவமைத்தொகை

C (உம்மைத்தொகை D) உம்மை விரி

6. <u>**கூறியவாறு செய்க (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)**</u> **(3x1=3)**

I. சுடு மண் (பெயரெச்சத் தொடராக்குக)

A) மண் சுடும் B) சுடுகின்ற மண் C) சூடுகின்ற மண்

D) மண் சுடுமா?

II. உணவு உண்டாயா? (இக்கேள்விக்கு உற்றது உரைத்தல் விடை எழுதுக)

A) வயிறு வலிக்கும் B) பால் குடித்தேன்

C) உண்ணவில்லை D) வயிறு வலித்தது

III. எலியைப் பிடிக்கும் பொறி ( உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையாக்குக )

A) எலியது பொறி B) எலியினது பொறி

C) எலிக்குப் பொறி D) எலிப்பொறி

IV. பொய்கை (நெய்தலுக்கு உரிய நீர்நிலை ஆக்குக )

A) அருவி நீர் B) உவர்க்கழி C) காட்டாறு ஈ. சுனைநீர்

V. எள்ளை உண் (பொதுமொழி ஆக்குக)

A( எள் B (எட்டு C (எள் உண் D) எள் து

**பகுதி - இ -(இலக்கியம்)**

**Main course book -31 Marks**

7. <u>**பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக**</u>

**[3x1=3).**

**I.** எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் ............ தறிவு

A) அறிவ B) உணர்வ C) காண்ப D) தெரிவ

II. நாள்தோறும் நாடி முறைசெய்யா ____________
நாள்தோறும் நாடு கெடும்

A) வேந்தன் B) மன்னவன் C) அரசன் D) மக்கள்

III. குற்றம் இலனாய்க் குடிசெய்து ____________

சுற்றமாய்ச் சுற்றும் உலகு

A) சேர்வானைச்  B) வாழ்வானைச்  C) நிற்பானைச்

D) உயர்வானைச்

8. <u>பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள்தெரிவு செய். வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக</u>. [5x1= 5]

**"உறங்கு கின்ற கும்ப கன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்**
**இறங்கு கின்ற தின்று காணெ ழுந்தி ராயெ ழுந்திராய்**
**கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே**
**உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்"**

<u>வினாக்கள்</u>

I. இச்செய்யுள் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?

A) தேம் பாவணி  B) கம்பராமாயணம்

C) சீவகசிந்தாமணி  D) திருவாசகம்

II. இந்நூலின் ஆசிரியர் யார்?

A) உமறுப்புலவர்  B) சேக்கிழார்  C) வீரமாமுனிவர்

D) கம்பர்

III. இச்செய்யுள் இடம் பெற்றுள்ள படலத்தின் பெயர் என்ன?

A) நாட்டுப்படலம்  B) ஆற்றுப்படலம்

(இ) கங்கைப்படலம்  D) கும்பகர்ணன் வதைப்படலம்

IV. கறங்கு என்ற சொல்லின் பொருள் என்ன?

A) எமன்  B) காற்றாடி  C) வில்  D) அம்பு

V. இச்செய்யுளில் அமைந்த சந்தம் எதைப்போன்று உள்ளது ?

A( கடப்பாரையால் இடிப்பது போன்ற சந்தம்

B) உலக்கையால் இடிப்பது போன்ற சந்தம்

C) அம்மியில் அரைப்பது போன்ற சந்தம்

D) சிங்கம் முழங்குவது போன்ற சந்தம்

9. <u>பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை தருக</u> (2x4=8)

I. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?.
II. முல்லைப்பாட்டு காட்டும் கார்காலச் செய்திகளை விவரி
III. திருவித்துவக்கோட்டு அம்மானை குலசேகரர் வாழ்த்துவது எப்படி?
IV. முயற்சியின் சிறப்பு குறித்து திருக்குறள் மொழிவன யாவை?

**10. <u>எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி</u>**

**(3x5=15 )**

I. காற்று எவ்வாறெல்லாம் ஆற்றலாகத் திகழ்கிறது
II. வறுமையிலும் விருந்தோம்பினர் தமிழர்- விளக்குக.
III. மெய்நிகர் உதவியாளர் குறித்து விவரி
IV. தமிழ்மொழி பொருள்வளம் உடையது என்பதை விளக்குக
V. திரைத்துறையில் கலைஞரின் பங்களிப்பை விவரித்து எழுதுக

**பகுதி - ஈ ( துணைப்பாடம்)**

**Section –D Non-detail-10 Marks**

**11. <u>பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுது</u>**

**1x10=10**

I. புயலிலே ஒரு தோணி
II. புதிய நம்பிக்கை
III. பாய்ச்சல் சிறுகதைச் சுருக்கம்

## பகுதி - உ (படைப்பாற்றல்)

## Section -E Creative Writing-17 Marks

12. **. அ.கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(3)**



ஆ. பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.

**பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.** **(3)**

I. எருது புண் காக்கை அறியுமா ?

II. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

13. **கடிதம் எழுதுக** **(1x8=8)**

I. வருமானச் சான்றிதழ் வேண்டி வட்டாட்சியர்க்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக

II. அல்லது

III. மனவளத்தை வளர்த்துக் கொள்ளும் முறை குறித்து அயலூர் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

[இரண்டு கடிதங்களிலும் உன் முகவரி: **அ, அறவாழி /அ.நறுமுகை 10. சுடர் குடியிருப்பு , அண்ணாநகர் மேற்கு , சென்னை-600040** எனக்கொள்க]

14. **ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.** **1x6=6**

I. முன்னுரை - தகவல் ஊடகங்கள் -ஊடக வகைகள் - செய்தித்தாள் வானொலி,தொலைக்காட்சி ,சமூக வலைத்தளங்கள் – ஊடகத்தால் ஏற்படும் நன்மைகள் - எதிர்மறை விளைவுகள்- முடிவுரை.

II. முன்னுரை - முன்தோன்றி மூத்த தமிழ் - இலக்கிய வளம்- இலக்கணச்சிறப்பு- பழமையும் புதுமையும் - அறிவியல் தமிழ் இணையத் தமிழ் -முடிவுரை.

III. முன்னுரை - வரதட்சணை என்னும் தீய நடைமுறை - பெண்களுக்கான அநீதி - அரசாங்கத்தின் முயற்சி- பெண்கள் அடையும் துயர் - சமநீதி காண்போம் - மகிழ்வான வாழ்வு - முடிவுரை.